# சிங்கப்பூரில் இன, சமய விவகாரங்கள் முறையாகக் கையாளப்படவில்லை என்றால் அது மக்களுக்குச் சினமூட்டும்- கருத்தாய்வு

***செய்தி***, 4 February 2025

சிங்கப்பூரில் இன, சமய விவகாரங்கள் முறையாகக் கையாளப்படவில்லை என்றால் சினமூட்டும் சூழல் உருவாகும் என்று கருத்தாய்வொன்றில் தெரியவந்துள்ளது.

இன, சமய விவகாரங்கள் சரிவரக் கையாளப்படவில்லை என்றால் குறிப்பிட்ட சமூகங்களுக்கு எதிராக அவை சினத்தை ஏற்படுத்தக்கூடும் என்று இங்கு வசிப்போரில் கிட்டத்தட்ட பாதிப் பேர் நினைக்கின்றனர். அவை பெரும்பாலும் வன்முறைக்கு இட்டுச் செல்லக்கூடும் என்று ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதியினர் கருதினர்.

கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய கருத்தாய்வு அவ்வாறு கூறுகிறது.

அதில் நாலாயிரம் சிங்கப்பூர்வாசிகள் பங்கெடுத்தனர்.

இன, சமய நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதில் சிங்கப்பூர் அரசாங்கம் சிறந்த முறையில் செயலாற்றியிருப்பதாக 90 விழுக்காட்டுக்கும் மேற்பட்டோர் குறிப்பிட்டனர்.

இன, சமயப் பாகுபாடு காட்டாத நியாயமான கட்டமைப்பை அரசாங்கம் கட்டிக்காப்பதாகவும் அவர்கள் கூறினர்.

மக்கள்தொகையின் இன-விகிதாசாரத்தைக் கட்டிக்காப்பதில் குடிநுழைவுக் கொள்கை முக்கியம் என்று கிட்டத்தட்ட பத்தில் எட்டுப் பேர் நம்புகின்றனர்.